## சிறப்பு தலைப்பு: தெரிவு / முற்குறிப்பு மற்றும் ஒரு இறையியல் சமத்துவத்துக்கான தேவை

**SPECIAL TOPIC: ELECTION/PREDESTINATION AND THE NEED FOR A THEOLOGICAL BALANCE**

தெரிந்துகொள்ளல் என்பது ஒரு அற்புதமான உபதேசமாகும். இருப்பினும், இது சாதகவாதத்திற்கான அழைப்பு அல்ல, ஆனால் இது மற்றவர்களின் மீட்பிற்கு வழிமுறையாக இருக்கும் ஒரு முறை, ஒரு கருவி ஆகும்! இந்த சொல் முதன்மையாக பழைய ஏற்பாட்டில் சேவைக்குப் பயன்படுத்தப்பட்டது; இந்த சொல் முதன்மையாக புதிய ஏற்பாட்டில், சேவையினால் வழங்கப்படும் இரட்சிப்புக்காக பயன்படுத்தப்பட்டது. தேவனின் இறையாண்மைக்கும் மனிதகுலத்தின் சுதந்திர விருப்பத்திற்கும் இடையிலான முரண்பாட்டை வேதாகமம் ஒருபோதும் இணக்கவில்லை, ஆனால் அவை இரண்டையும் உறுதிப்படுத்துகிறது! தேவனின் இறையாண்மை தேர்வில் ரோமர் 9 மற்றும் அதற்கான மனிதகுலத்தின் பிரதி பதில் ரோமர் 10 (ஒ.பா. ரோமர் 10: 11,13) வேதாகம நெருக்கடிநிலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த இறையியல் நெருக்கடிநிலைக்கு ஒரு திறவுகோல் எபேசியர் 1: 4 ல் காணப்படுகிறது. இயேசு தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர், ஆகவே அனைவரும் அவருக்குள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் (கார்ல் பார்த்). இயேசுவே வீழ்ந்த மனிதகுலத்தின் தேவைக்கு தேவனின் "ஆம்" என்ற பதிலாவார் (கார்ல் பார்த்). எபேசியர் 1: 4ன் படி முற்குறிப்பின் நோக்கம் பரலோகம் அல்ல, பரிசுத்தம் (கிறிஸ்தவத்தன்மை) என்று வலியுறுத்துவதன் மூலம்  இது தெளிவுபடுத்தப்படுகிறது. நாம் பெரும்பாலும் நற்செய்தியின் நன்மைகளுக்கு ஈர்க்கப்படுகிறோம், பொறுப்புகளை புறக்கணிக்கிறோம்! தேவனின் அழைப்பு (தெரிந்துகொள்ளல்) காலத்திற்கும் நித்தியத்திற்குமானதாகும்!

கோட்பாடுகள் மற்ற சத்தியங்களுடன் தொடர்புடையவைகளாகக் காணப்படும், ஒன்றுகூட, தொடர்பில்லாத சத்தியங்களாக இருக்காது. ஒரு நட்சத்திரத்திரமும், ஒரு விண்மீன் கூட்டமும் இதற்கு ஒரு நல்ல உருவகமாக சொல்லலாம். தேவன் சத்தியத்தை கிழக்கதிய வகைகளில் முன்வைக்கிறார், மேற்கத்திய, வகைகளில் அல்ல. கோட்பாட்டு சத்தியங்களின் பேச்சுவழக்கான (முரண்பாடான) ஜோடிகளால் ஏற்படும் நெருக்கடிநிலைகளை  நாம் அகற்றக்கூடாது:

1. முற்குறிப்பும், மனித சுதந்திரமும்
2. விசுவாசிகளின் பாதுகாப்பும்,  நீடியபொறுமையின் தேவையும்
3. ஜென்ம பாவமும் விருப்பம் சார்ந்த பாவமும்
4. பாவமற்ற தன்மையும் (பரிபூரணவாதம்) பாவம் குறைவாக செய்தலும்
5. ஆரம்ப உடனடி நீதிமாணாக்கப்பட்டாலும் பரிசுத்தமாகலும் எதிர் முற்போக்கான பரிசுத்தமாக்கல்
6. கிறிஸ்தவ சுதந்திரம் மற்றும் கிறிஸ்தவ பொறுப்பு
7. தேவன் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர் எதிர்  தேவன் நிலைத்திருபவர்.
8. தேவன் இறுதிவரைக்கும் அறியப்படாதவர் மற்றும் தேவன் வேதத்தில் அறியப்பட்டவர்
9. தேவனுடைய ராஜ்யம் தற்போதையது  மற்றும் எதிர்காலத்துக்குரியது.
10. தேவனின் பரிசாக மனந்திரும்புதல் எதிர் மனித உடன்படிக்கைகான அவசியமான பிரதியுத்தரம்  மனந்திரும்புதல்
11. இயேசு தெய்வீகமாகவும், இயேசு மனிதராகவும்
12. பிதாவுக்கு சமமான இயேசு மற்றும் பிதாவுக்கு அடிபணிந்தவர்

"உடன்படிக்கை" என்ற இறையியல் கருத்து தேவனின் இறையாண்மையை (அவர் எப்போதும் முன்னதாகவே எடுத்து நிகழ்ச்சி நிரலை அமைத்துக்கொள்கிறார்) மனிதகுலத்திலிருந்து ஆரம்பித்து தொடர்ந்து மனந்திரும்பும் நம்பிக்கையின் பதிலை (ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 3: 16,19; 20. : 21) ஒன்றிணைக்கிறது. வசனங்களை மீள்பரிசோதிப்பதில்கவனம் செலுத்த வேண்டும். முரண்பாட்டின் ஒரு பக்கம் மற்றைய பக்கத்தின் அர்த்தத்தை குறைத்துவிடும். உங்களுக்கு பிடித்த கோட்பாடு அல்லது இறையியல் முறையை மட்டுமே வலியுறுத்துவதில் இதனால் கவனமாக இருங்கள்!

Copyright © 2014 Bible Lessons International